Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஞு மேமீ 23உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 10

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

சென்ற வாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் முக்கியமான இடங்களாகிய பர்லின், கீல், எம்டன், கலோன், சேர்பர்க் முதலிய இடங்களைத் தாக்கின. கீல் என்பது ஜெர்மனியின் கப்பற் படைத்தளம்; அதிலுள்ள முக்கியமான கப்பற் கட்டும் சாலைகளுக்குச் சேதம் உண்டாக்கப்பட்டது. கலோன் என்ற இடம் பலமாகத் தாக்கப்பட்டது. ரைன் நதியின் இரண்டு கரைகளிலும் உள்ள தொழிற்சாலைக் கட்டடங்கள் தீப்பிடித்துக்கொண்டன. ஹெனேவர் என்ற ஜெர்மன் நகரம் ஒரு பெரிய விமானப்படையால் தாக்கப்பட்டது. பட்டணத்தின் தொழிற்சாலைப் பிரதேசத்தில் பல இடங்களில் நெருப்புப்பற்றிக் கொண்டு எரிந்தது. ஹாம்பர்க், கக்ஸ்ஹேவன், செயிண்ட் நாசேர், லோரியண்ட், இச்முய்தீன் முதலிய இடங்களும் தாக்கப்பட்டன.

வட மேற்கு ஜெர்மனியை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கி, வெடி குண்டுகள் போட்ட இடங்களில் "சில முக்கியமான" சேதத்தை உண்டாக்கியிருக்கின்றன என்பதை ஜெர்மன் 'ரேடியோ' ஒப்புக்கொள்கிறது.

கலே, பலோன், தீப்பி என்ற பிரெஞ்சுப் பட்டணங்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. பிரெஞ்சுக் கரையோரப்பட்டணங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. பிரிட்டனின் தெற்குக்கரையில் பிரான்சில் போட்ட வெடிகுண்டுகள் வெடிக்கும் சப்தம் தூரத்தில் இடி இடிப்பது போலக் கேட்டது.

ஹாலந்துக்கு வடக்கிலுள்ள பிரீஷியன் தீவுகளுக்கருகில், அச்சுக் 'கான்வாய்' கப்பல்கள் தாக்கப்பட்டன. மூன்று கப்பல்கள் நெருப்புப் பிடித்துக் கொண்டன. பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் கீழாகப் பறந்து கப்பல்களைத்தாக்கின. ஒரு கப்பலின் 'ரேடியோ' 'ஏரியல்' கம்பி ஒரு விமானத்தாக்குதலினால் அறுந்து போயிற்று.

பகல் நேரத்தில், நார்வீஜியன் கரை யோரத்தில் இருந்த கப்பல்களின்மேல், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசின. 2,500 டன் எடையுள்ள ஒரு 'சப்ளை' கப்பல் முழுகடிக்கப்பட்டது.

சென்ற வாரம், ஜெர்மன் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்ட பிரபல பிரிட்டிஷ் கட்டடங்களைப் பற்றிய விவரங்கள் வெளிவந்திருக்கின்றன. காண்டர்பெரி ஆர்ச் பிஷப்பின் வாசஸ்தலமாகிய லாம்பெத் மாளிகை, குயின்ஸ் ஹால், செயிண்ட் ஜேம்ஸ் மாளிகை, செயிண்ட் கிளெமெண்ட் டேன்ஸ் மாதா கோவில், ஓல்டு பெய்லி என்ற குற்ற விசாரணைக் கோர்ட்டு, ஜீவரக்ஷண சங்கக்கட்டடம்—இவையெல்லாம் இடிந்து பழுதாய்விட்டன. ஆர்ச் பிஷப்-அவர்கள் லாம்பெத் மாளிகையில் இரவில் இருக்கும் போது, சில அக்கினிக் குண்டுகள் கட்டடத்தின் மேலும், தோட்டத்திலும் விழுந்தன. மாளிகையில் இருந்த சிறு மாதாகோவிலின் தாழ்வாரம் நெருப்புப்பிடித்துக்கொண்டு முழுதும் எரிந்து போய்விட்டது. அங்கு இருந்த மதசம்பந்தமான புத்தக சாலையில் இருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்கள் தீக்கிரையாயின. ஆனால், நல்ல காலமாக, மிக அருமையான புத்தகங்கள் எல்லாம், யுத்தம் ஆரம்பித்தவுடன் வேறிடத்துக்குக் கொண்டு சேர்க்கப்பட்டன.

பிரிட்டனின் கரை யோரங்களில், பலபாகங்களில், ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. நடந்த விமானப் போரில், ஏழு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மேற்கு மிட்லாண்ட்ஸ் பிரதேசத்தில், கடுமையான வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றது. அக்கினிக் குண்டுகளும், வெடிகுண்டுகளும் வீசப்பட்டன. சொத்துக்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது; கொஞ்ச உயிர்ச்சேதமும் உண்டாயிற்று.

வெஸ்ட் மின்ஸ்டர் அபே என்ற புகழ் பெற்ற பிரிட்டிஷ் மாதா கோவில், வெடிகுண்டுகளால் அடைந்த சேதம் சுமார் 135,000 பவுன் என்று மதிப்பிடப்படுகிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை, புதிதாக ஒரு பிரார்த்தனை மேடை கட்டப்பட்டு, அதிலிருந்து தொழுகை நடத்தப்பட்டது. பாதிரிகளும், தொழுபவர்களும் மிக நெருங்கியிருக்கும்படி நேர்ந்தது.

மேமீ 17-ந்தேதியோடு முடிந்த வாரத்தில, பிரிட்டன் மேல் நடந்த விமானப்போரில், 65 ஜெர்மன் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. ஹிட்லரின் பிரதம சகாவான ஹெஸ்ஸைக் கொண்டுவந்த விமானத்தைச் சேர்த்தால் மொத்தம் 66, விமானங்களை ஜெர்மனி சென்ற வாரத்தில் இழந்திருக்கிறது.

ஜெர்மன் விமான வெடி குண்டுகளால் காயப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள், இவர்களின் கணக்கு விவரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. எப்ரல் மாதத்தில் 6,065 பேர் உயிரிழந்தார்கள்; 6,926 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெற்று வருகிறார்கள். இறந்துபோனவர்களில் பெண்கள் 2,418, குழந்தைகள் 680. காயமடைந்தவர்களில் 2,748 பேர் பெண்கள்; 511 பேர் குழந்தைகள். கணக்கில் சேராமல், காணாமற் போன 61 பேர் இறந்துபோனதாக நம்பப்படுகிறது.

### 2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக்கடலும்.

சென்ற வாரத்தில், ஆப்பிரிக்காவில் பிரிட்டனுக்கு பெரிய வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. அம்பா அளகி என்ற முக்கியமான பட்டணம் சரணமடைந்தது. அபிசீனியாவில் உள்ள இத்தாலியத் துருப்புகளின் பிரதம தளகர்த்தர், அயோஸ்டா பிரபு, சரணமடையமாட்டேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்து, கடைசியில் வேறு வழியில்லாமல் சரணாகதியடைந்தார். அம்பா அளகிக் கோட்டையைப் பாதுகாத்த 7,000 இத்தாலிய சிப்பாய்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். சரணமடைவதற்குமுன், அயோஸ்டா பிரபு, முசலோனிக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் அவர் கூறியதாவது:— "சரணமடைவதைத் தவிர வேறு வழியில்லாததனால்தான், நான் அப்படிச் செய்கிறேன், ஆனால், இதைத் தடுப்பதற்கு எவ்வளவோ பிரயாசையெடுத்தும், பயனில்லாமல் போய்விட்டது. ஆனால் யுத்தம் இன்னும் முடியவில்லை. கூடிய சீக்கிரம், நம்முடைய நாட்டின் பெருமையைக் காப்பாற்றுவதற்காக, இத்தாலிய ரத்தத்தில் நனைந்து நாங்கள் இந்த இடங்களுக்குத் திரும்பி வருவோம்." முசலோனி அதற்குப்பதில் செய்தி அனுப்பியதில், "நீங்களும், உங்கள் சிப்பாய்களும் வீரத்துடன் போர் புரிந்தீர்கள், உங்களுடைய வீரபோரை, இத்தாலிய மக்கள் பாராட்டி, வருங்காலத்தைப்பற்றி நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைத் தாங்களும் கொண்டிருப்பதாக அறிவிக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

அம்பா அளகிக் கோட்டை இத்தாலியச் சிப்பாய்கள் போர் செய்வதை நிறுத்திச் சரணமடைந்தபோது, பிரிட்டிஷார், இத்தாலியர்களுக்குப் பூரண ராணுவ மரியாதைகளெல்லாம் செய்தார்கள்.

அம்பா அளகியைப் பிடித்ததைப்பற்றிப் பாராட்டி, பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பார்லி

மெண்டில் பேசியிருக்கிறார். தென்னுப்பிரிக்கத் துருப்புகள் செய்த வேலையை மெச்சியிருக்கிறார். இரண்டு இந்தியப் பட்டாளங்கள் இந்த வெற்றிக்கு உதவியதை, மிஸ்டர் சர்ச்சில் புகழ்ந்து பேசியிருக்கிறார். இந்தியச் சிப்பாய்கள் வெற்றிமாலே சூடினார்களென்றும், அபூர்வமான போர் புரியுங் குணங்களேக் காட்டினார்களென்றும், அவர் கூறினார்.

லிபியாவில், சோலும், மூசேத் என்ற இரண்டு இடங்களேயும், பிரிட்டிஷார் கைப்பற்றிக்கொண்டார்கள். சோலும் முன்பு பிரிட்டிஷாரிடம் இருந்த முக்கியமான இடம். பிரிட்டிஷ் விமானங்கள், பென்காசி, தார்னு, எல் சஜாலா, பார்ஜ் முதலிய இடங்களின்மேல் வெடி குண்டுகளேப் போட்டன.

மேற்குப் பாலேவன யுத்தத்தில் ஈடுபட்ட ஐந்து ஜெர்மன் பட்டாளங்களும் பின்னடைந்து சென்று கொண்டிருக்கின்றன.

மத்தியதரைக் கடல் யுத்தத்தில், மேமீ 16-ந் தேதியோடு முடிந்த வாரத்தில், 27 எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டன ; அநேக விமானங்கள் தரையில் சேதப்படுத்தப்பட்டன. மத்திய தரைக் கடல் யுத்தத்திலும், ஆப்பிரிக்கா யுத்தத்திலும், 11 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன.

### 3. அமெரிக்காவும் அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்காவின் வர்த்தக சங்கம், யுத்த சாமான்கள் தயார் செய்வது இரண்டு மடங்கு அதிகப்படுத்தப்பட்டு வருகிறது என்று பிரிட்டிஷ் வர்த்தக சங்கத்துக்கு உறுதி கூறியிருக்கிறது.

கப்பல் கட்டும் திட்டத்தின்படி இரண்டு வாரங்களுக்குப் பிறகு கட்ட ஆரம்பிக்கவேண்டிய 200 வர்த்தகக் கப்பல்கள் இப்போதே கட்ட ஆரம்பிக்கப்பட்டன என்று அமெரிக்க கப்பற் கமிட்டியார் அறிவிக்கின்றனர்.

சென்ற வாரம், அமெரிக்க கப்பற்படைப் பயிற்சிக் கலாசாலே மாணவர்களுக்குச் செய்த ஒரு பிரசங்கத்தில், அமெரிக்கக் கப்பற் படை மந்திரி, கர்னல் நாக்ஸ், இனிமேல் ஹிட்லரைப் போன்றவர்கள் தலேயெடுக்க வொட்டாத நிலேமையை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னார். சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும் ஒரு பலம் பொருந்திய கப்பற் படை அமெரிக்காவுக்கு இருக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

வாடகை—கடன் மசோதாவின் கீழ், பிரிட்டனுக்கு உணவுப் பொருள் அனுப்புவது சம்பந்தமாக, அமெரிக்கா ஏராளமான முட்டைகளே வாங்கியிருப்பதாக "சன்" பத்திரிகை அறிவிக்கிறது. சென்ற வாரம், 1 கோடியே 26 லட்சம் பவுண்டு எடையுள்ள "ஐசில்" வைக்கப்பட்ட முட்டைகளும், 6 லட்சத்து 17 ஆயிரம் "ஐசில்" வைக்கப்படாத முட்டைகளும் வாங்கப்பட்டன.

அமெரிக்கத் தேசிய வர்த்தக வாரக் கொண்டாட்டத்தின் சம்பந்தமாக பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் அச்சு நாடுகளின் எதேச்சாதிகார கொள்கைகளேயும், முறைகளேயும் கண்டித்திருக்கிறார். "எதேச்சாதிகார அட்டகாசம் நம்முடைய அயல்நாட்டு வியாபாரத்தையும் தேசீய வாணிபச் செழிப்பையும் கெடுக்கிற தோடல்லாமல் குடியரசு வாழ்க்கை முறையின் அடிப்படையான சமூக, ஆத்மார்த்தமான கொள்கைகளே அழிப்பதற்கு முயற்சிசெய்கிறது" என்று கூறினார். குடியரசுக் கொள்கையை அமெரிக்கா பாதுகாக்கவேண்டும்; பொருளாதாரத் துறையிலும், அரசியலிலும் தாராளமான கொள்கையைப் பரப்புவதில் பெற்றிருக்கும் முதன்மை ஸ்தானத்தைத் தொடர்ந்து அடையவேண்டும்—என்று பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் கூறினார்.

அமெரிக்க காரியதரிசி, மிஸ்டர் ஹெரால்டு ஐக்ஸ், ஒரு பிரசங்கத்தில், பிரிட்டனுக்கு எல்லா உதவியும் அமெரிக்கா கொடுக்கவேண்டுமென்று கூறினார்.

### 4. கிரீசும், இடலியும்.

கிரீசில், ஆஸ்திரேலியத் துருப்புகள் வெற்றியடையாததற்குக் காரணம், தகுந்த யுத்த முஸ்தீப்பு இல்லாமையால்தான் என்று ஆஸ்திரேலிய கப்பற் படை மந்திரி, மிஸ்டர் ஹியூக்ஸ், பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் கூறுகிறார். அதாவது, 'டாங்கி' கள், பீரங்கிகள் முதலிய ஆயுதங்கள் அவர்களுக்கு இருந்தன; ஆனல் ஆகாய விமானங்கள் வேண்டிய அளவுக்கு அவர்கள் கொண்டுபோக வில்லே.

கிரேக்கப்பட்டாளத்தின் முக்கியமான படைகள், கிரீசிலிருந்து போர் புரிந்துவிட்டு, மத்தியக் கிழக்கரங்கத்தில் வந்து சேர்ந்திருக்கின்றனவென்றும், கிரேக்கத் தங்க அடக்கப் பொக்கிஷம், எதிரிகளுடைய கையில் அகப்படாமல் பத்திரமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும், கிரேக்க முதல் மந்திரி அறிவித்திருக்கிறார்.

கிரேக்கப் பள்ளிக்கூடங்களில் ஜெர்மன் கட்டாய பாஷையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிரேக்கத் துரோகிகளின் அரசாங்கத்தில் உபதலேவராகவும், கல்வி மந்திரியாகவும் இருக்கும் புரொபசர் லோகோதிடோபோலோஸ் தான் இந்த ஏற்பாட்டைச் செய்தவர்.

கிரேக்க மந்திரிகள், காட்சியாஸ் (பொக்கிஷம்), அபாஸ்டோலிடிஸ் (நியாயம்), இருவரும் துருக்கியிலிருந்து பாலஸ்தீனத்துக்குக் கப்பலில் போகும்போது ஒரு இத்தாலிய ஆகாய விமானம் யந்திர பீரங்கிகளால் கப்பலேச் சுட்டது. ஆனல் ஒருவரும் காயப்படவில்லே. கிரேக்க மந்திரிகள் ஹைபா என்ற இடத்துக்கு வந்து சேர்ந்து, மத்தியக் கிழக்கரங்கத்தில் ஒரு இடத்துக்குப்போகிறார்கள்.

ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்ட கிரேக்க விமானச் சாலேகள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. ஆர்காஸ், மெனீதி, மலாவோய், ஹசானி முதலிய இடங்களில் உள்ள விமானச் சாலேகள் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

கிரீஸ் சண்டையிலிருந்து பின்னடைந்து, அநேக கஷ்டங்கள் அனுபவித்துக் கடைசியில் சைப்ரஸ் என்ற தீவுக்குச் சென்ற ஆஸ்திரேலிய சிப்பாய்கள், தாங்கள் தப்பிவந்த விவரங்களேக் கூறினார்கள்.

கத்தோலிக்க மதத்தலேவரான போப் அவர்கள் வசிக்கும் வாடிகன் நகரத்திலிருந்து வரும் கடிதங்களும், தந்திகளும், இத்தாலிய ராணுவ அதிகாரிகளால் பரிசீலனே செய்யப்பட்ட பிறகுதான் வெளியில் அனுப்பப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ரோமுக்குச் செல்லும் கடிதங்கள் கூட பரிசீலனே செய்யப்படும்.

கிரீசின் அரசரும், அரசாங்கமும் இருக்கும் கிரீட் தீவை நாஜிகள் தாக்கினார்கள். ஆகாய விமானங்களில் நியூஜிலாந்தியர்களேப்போல் உடைபோட்டுக் கொண்டு, 'பாரஷூட்' (விமானக்குடை) வழியாக விமானங்களிலிருந்து கீழே இறங்கி, போர்புரிய ஆரம்பித்தார்கள் 3,000 பேர் அம்மாதிரி இறங்கினார்கள். மலேனி ஆகாய விமானத் தளத்தைக் கைப்பற்ற அவர்கள்செய்த முயற்சி பயனடையவில்லே.

அயோஸ்டாபிரபு சென்ற செவ்வாய்க்கிழமை தன்னுடைய துருப்புகளுடன் சரணமடைந்தார். 19,000 இத்தாலியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

### 5. பால்கன்ஸ் துருக்கி, இராக், இரான் முதலியன.

இராக்கில் பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. யூப்ரடீஸ் நதிக்கரையில் உள்ள பலூகா என்ற முக்கியமான இடம் பிரிட்டிஷ் துருப்புகளால் கைப்பற்றப்பட்டது. ரஷித் விமானச் சாலே பிரிட்டிஷ் விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டது. ஜெர்மன் விமானங்கள் ஹாப்பனியா வைத் தாக்கின.

அராபியதேசங்கள் பிரிட்டனேத்தான் ஆதரிக்குமே ஒழிய, ரஷித் அலியை ஆதரிக்காது என்று அரசர் இபன்சாத், ரஷித் அலியின் பொக்கிஷமந்திரியிடம் கூறிவிட்டார்.

இந்தியாவில் ஹைதராபாத் நிஜாம் அரசர், பிரிட்டிஷார் இராக்கில் செய்த காரியத்தை ஆதரித்தும், ரஷித் அலியின் செய்கையைக் கண்டித்தும், ஒரு அறிக்கைவிட்டிருக்கிறார்.

இரானில், பொக்கிஷமந்திரி தம்முடைய பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

சிரியாவில் ஜெர்மன் விமானங்கள் பல வந்திறங்கியிருக்கின்றன. பிரிட்டிஷ் விமானங்கள் சிரியாவின் விமானத்தளங்களைத் தாக்கின.

துருக்கியின்மூலம் ஜெர்மன் துருப்புகளை அனுப்புவதில்லை என்று, ஜெர்மனி துருக்கிக்கு வாக்குறுதி கூறியிருக்கிறது. துருக்கி யுத்தத்திற்குமுன் செய்யவேண்டிய முன் ஜாக்கிரதை ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டுவருகிறது. 25 வயதிலிருந்து 45 வயதுவரை உள்ள 'ரிசர்வ்' வகுப்புகளைச்சேர்ந்த முஸ்லீம்கள் உடனே ராணுவ ஆபீசில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள்.

யூகோஸ்லாவியாவிலிருந்து இத்தாலியால் பங்குபோடப்பட்ட குரோஷியாவுக்கு ஒரு பொம்மை அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அயோஸ்டா பிரபுவின் சகோதரர் ஸ்போலீடோ அரசராக்கப்பட்டார்.

சிரியாவில், சுதந்தர பிரெஞ்சுத்துருப்புகள் பிரவேசித்திருக்கின்றனவென்றும், சிரியாவிலுள்ள விஷிப் பிரெஞ்சுத்துருப்புகள் அவர்களுக்கு ஆதரவளிக்கும் மனப்பான்மையுடன் இருப்பதாகவும் அறிந்து விஷிஅரசாங்கம் கவலைகொண்டிருக்கிறது. ஒரு பிரெஞ்சுப்படை முழுவதும் சுதந்தரப் பிரெஞ்சுத்துருப்புகளுடன் போய்ச் சேர்ந்துவிட்டதாகத் தெரிகிறது. சிரியாவில், விஷி அரசாங்கத்துக்கு விரோதமான அபிப்பிராயம் பலப்பட்டுவருகிறது.

விஷி அரசாங்கத்தின் ஆகாய விமானப்படை மந்திரி, பிரிட்டிஷ் விமானத்தாக்குதலைத் தடுக்கப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய சிரியாவுக்குப் போயிருக்கிறார். ஆனால் அவர் போனதின் உண்மையான நோக்கம், விஷி அரசாங்கத்தின்மேல் துருப்புகளுக்கு இருக்கும் அதிருப்தியைக் குறைப்பதற்குத்தான். ஜெனரல் டி காலுக்குச் சாதகமாக அபிப்பிராயம் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது.

சிரியாவில் விஷயங்கள் ஒரு நெருக்கடியான நிலைமையைக் காட்டுகின்றன. பிரிட்டிஷ் ஸ்தானீகர் காரியாலயத்திலுள்ள உத்தியோகஸ்தர்களை, எட்டுநாளைக்குள் நாட்டைவிட்டுச் செல்லவேண்டுமென்று விஷி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் சிரியாவின் விமானச்சாலைக்குமேல் பறந்தபோது, பிரெஞ்சு விமான ஓட்டிகள், அவைகளைச் சுடுவதற்குப் பதிலாக, கையை அசைத்து வரவேற்றார்கள்.

சென்ற 20 வருஷங்களாக, இராக்கில் ஜெர்மன் பிரசாரகர்கள் ஜெர்மன பணத்தைத் தாராளமாக உபயோகித்து, பிரிட்டனுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்துவந்திருக்கிறார்களென்று, இராக்கில் 22 வருஷம் இருந்துவிட்டு இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கும் ஒரு பெண்மணி தன்னுடைய அனுபவங்களைக் கூறியிருக்கிறார்.

### 6. கப்பல் நிலைமை.

அமெரிக்கத் துறைமுகங்களில் உள்ள பத்து பிரெஞ்சுக்கப்பல்கள், அமெரிக்க கரைபோரப் பாதுகாப்புப் படையின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டன.

ரயோ டி ஜெனீரோவை, சென்ற ஏப்ரல்மீ 28உ விட்டுச் சென்ற ஜெர்மன் சாமான் கப்பல் "லெக்" என்பது, பாஹியாவுக்குத் தெற்கில் பிரிட்டிஷ் சண்டைக் கப்பலால் தாக்கப்பட்டு, முழுகடிக்கப்பட்டது. அந்தக் கப்பல் 3,290 டன் எடையுள்ளது.

"சம்சம்" என்ற எகிப்திய பிரயாணிக்கப்பல் ஜெர்மன் கப்பலால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. அதிலுள்ள அமெரிக்கர்களும், கனேடியர்களும் பிரான்சில் இறக்கப்பட்டிருக்கிறார்கள். எகிப்தியக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு, யுத்தப் பிரதேசங்களை எல்லாம் விட்டுவிட்டு வெகுதூரத்தில் போய்க்கொண்டிருந்த "சம்சம்" கப்பலைத் தாக்கி முழுகடித்ததைக் கண்டித்து "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை எழுதுகிறது.

பிரிட்டிஷ் கப்பற்படைத் துணைக்கப்பலான "காமிடோ" முழுகடிக்கப்பட்டது.

மேமீ 19உயோடு முடிந்த வாரத்தில், எதிரிகளுடைய எட்டு 'சப்ளை' கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. அவைகளின் மொத்த டன் எடை 40,500.

மத்திய தரைக்கடலில், 8,000 டன் எடையுள்ள ஒரு எதிரி வர்த்தகக் கப்பல், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு, முழுகடிக்கப்பட்டது.

### 7. தூரக்கிழக்கு அரங்கம்.

சீன—ஜப்பான் யுத்தம் மும்முரமாக நடந்துவருகிறது. ஜப்பானிய விமானங்கள், செங்தூ, லயாங்ஷான், சூய்பூ, ஷென்சி, சியான, வீனன முதலிய இடங்களைத் தாக்கி வெடிகுண்டுகளைப் போட்டன.

தெற்கு ஷான்சி மாகாணத்தில் நடந்த கடுமையான சண்டையில், இரு திறத்தார்க்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. ஜெனரல் வாங்ஷூன் என்ற சீனத் தளகர்த்தர் போரில் உயிரிழந்தார்.

ஷூந்தியா ஓஷின் பிரதேசத்தில் நடக்கும் போர் சீனர்களுக்கு அனுகூலமாயிருக்கிறதாம்.

ஷான்சி—ஹோனான் எல்லையில் நடந்த சண்டையில், ஜப்பானியர்களுக்குப் பெருத்த வெற்றி கிடைத்தது.

### 8. விஷி.

விஷி அரசாங்கத்துக்கும், ஜெர்மனிக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள், அமெரிக்காவின் அரசாங்கத் தலைவர்களின் அபிப்பிராயம், ஜெர்மனியின் நோக்கம் முதலிய விவரங்கள், வேறிடத்தில் ஒரு கட்டுரையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

விஷியின் ஒப்பந்தம் பிரெஞ்சுக்காரர்களைக் கட்டுப்படுத்தாதென்றும், விஷியின் அரசாங்கம் வயது சென்று தளர்ந்த ஒரு கிழவரால் நடத்தப்படுகிறதென்றும், அந்த அரசாங்கம் சுயேச்சையாக ஒரு காரியமும் செய்யும்படியான நிலையிலில்லை யென்றும், சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகளின் தலைவர் ஜெனரல் டி கால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், லண்டனில் இருக்கும் இதர நேச அரசாங்கங்களின் தலைவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

சென்ற சனிக்கிழமையன்று (மேமீ 17-ந் தேதி) நார்வேயில், வருஷந்தோறும் கொண்டாடப்படும் "தேசிய சுதந்தர தினத்"தை, கொண்டாடக்கூடாதென்று ஜெர்மானியர்கள் கடுமையான உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தரங்கமாகவாவது, பகிரங்கமாகவாவது, அன்றையதினம் யாதொரு கொண்டாட்டமும் நடைபெறக்கூடாது; எல்லா வேலையும், வியாபாரமும், வழக்கம்போல் நடக்கவேண்டும்; இந்த உத்தரவை மீறி நடப்பவர்கள் கொலை செய்யப்படுவார்கள்.

ஆனால், நார்வேயில் ஹிட்லருடைய பிரதிநிதியாகிய தர்பாவனும், நார்வேயின் துரோகி, குஸ்லிங்கும், நார்வே நாட்டுமக்கள் தத்தம் இருதயத்தில் தேசீய சுதந்தர தினத்தைக் கொண்டாடுவதைத் தடுக்கமுடியாது என்று நார்வேயின் உண்மையான அரசாங்கத்தார் ஒரு அறிக்கையில் கூறுகிறார்கள்.

நார்வேயின் 127-வது "தேசீய சுதந்தர நாள்" சம்பந்தமாக, அரசர் ஹாக்கன் என்பவர் (நார்வே துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு ஜெர்மானியரிடம் அடிமையாவதற்குமுன், நாட்டைவிட்டு வெளியேறியவர்), தம்முடைய நாட்டுமக்களுக்கு லண்டனிலிருந்து ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். இந்தக் கஷ்டமான நாள்களில், 1814-ம் வருஷத்தில் நார்வேயில் நிலைநாட்டிய சுதந்தரத்தைப்பற்றியும், நாட்டுமக்களின் உள்ளத்தில் சுதந்தர உணர்ச்சி எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கிறதென்பதைப் பற்றியும், அந்த சுதந்தர ஜோதியை எந்தக்காலத்திலும் அணைக்கமுடியாதென்ற உறுதியான எண்ணத்தைப்பற்றியும், அந்தச் செய்தியில் நார்வே அரசர் குறிப்பிட்டார்.

லண்டன் மாநகரத்தில் நார்வேயின் சுதந்தர தினக்கொண்டாட்டம் நடைபெற்றது. நார்வே அரசர் ஹாக்கன் விஜயம் செய்திருந்தார். அக்கொண்டாட்ட விழாவிற்கு, பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அவர் கூறியதாவது :—"நார்வேயிலிருக்கும் உங்களுடைய தேசமக்கள் கொடூரமான நாஜிகளுடைய கொடுங்கோலாட்சியின் கீழ் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்

கள். ஆகையால், உங்களுடைய தேசியத்திருநாளை நீங்கள் சந்தோஷத்துடனில்லாமல், வருத்தத்துடன் கொண்டாடுகிறீர்கள். இருந்தபோதிலும், உங்களுடைய மன உறுதி உடைக்கப்படவில்லை. அமெரிக்க நாட்டு மக்களும், பிரிட்டிஷ் மக்களும், நார்வே மக்களும், ஒரே மன உறுதியுடன் இருக்கிறார்கள். அதாவது, சட்டம், சுதந்தரம், சுயாட்சி இந்த உலகத்திலிருந்து எந்தக் காலத்திலும் அழிக்கப்படக் கூடாது என்பதுதான்.''

பம்பாயிலுள்ள நார்வே நாட்டு மக்கள் சென்ற சனிக்கிழமை, நார்வே சுதந்தர நாளைக் கொண்டாடினார்கள். நார்வேயில் குஸ்லிங் ஆட்சியின் கீழ் இருந்து தப்பி ஓடி வந்த கப்பற் படையைச்சேர்ந்தவர்களும், சிப்பாய்களும், அநேகர் வந்திருந்தார்கள். நார்வேயின் ஸ்தானிகர், மிஸ்டர் தார்லீப் அகில்சாந்து, கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அரசர் ஹாக்கனுக்கு ராஜ விசுவாசத்தைக் காட்டுவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தியத் துறைமுகங்களிலுள்ள நார்வீஜியன் கப்பல்களில் வேலை செய்யும் நார்வீஜியர்கள், நார்வீஜியன் விமானப்படை நிதிக்கு 1,000 பவுன் நன்கொடை வசூலித்துக்கொடுத்திருப்பதாக, நார்வே ஸ்தானிகர் அறிவித்தார்.

ஹாலந்தில், ஜெர்மானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழ், நாட்டு மக்கள் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். எல்லா தங்கநகைகளையும் ஜெர்மானியர்கள் பறிமுதல் செய்யப்போகிறார்கள் என்ற வதந்தி கேட்டு, அநேகர் தங்களுடைய நகைகளை உடனே விற்றுவிட்டார்கள். நாட்டிலுள்ள எல்லா வெண்ணெயும் ஜெர்மனிக்கு அனுப்பப்படும் என்பது மற்றொரு வதந்தி. இந்த வதந்தி உண்மையாயிருக்கவேண்டும். ஏனென்றால், ''அக்ரேரீஷ் நியூஸ் பிளாட்'' என்ற பத்திரிகை இதைப் பற்றி குறிப்பிட்டு எழுதியிருக்கிறது. அந்தப் பத்திரிகை எழுதுவதாவது :—''ஜெர்மனிக்கு எல்லா வெண்ணெயும் ஏற்றுமதி செய்யப்பட்டாலும், இருக்கிறதை வைத்துக்கொண்டு, நம் நாட்டு மக்கள் சந்தோஷப்படவேண்டும் நம்முடைய வாசகர்களுக்கு ஒரு விஷயத்தை நாம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம் ; நாம் ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறோம் ; ஜெர்மனியில் இருக்கும் மக்களை

## பிரிட்டனின் அபார தைரியம்.

**துறைமுகப்பட்டணப் பாதுகாப்புப் படையை சர்ச்சில் பார்வையிடுகிறார்.**




விட நாம் உயர்ந்த் வாழ்க்கையை அனுபவிக்க முடியாது ; அவர்களைவிடக் கஷ்டமான வாழ்க்கையைத்தான் நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.''

ருமேனியாவில், குளூச் என்ற பட்டணத்துக் கருகிலுள்ள ஒரு கிராமத்தில், ஒரு பெண் 6 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டாள். அவளுடைய குழந்தைகள் படிப்பதற்கு மாஜியர் பாடபுத்தகங்கள் தான் வாங்கவேண்டுமென்று, ஹங்கேரிய உபாத்தியாயர் கட்டாயப்படுத்தினாராம் ; புத்தகங்களை வாங்க மறுத்ததற்காக அந்தப் பெண்மணி சிறைக்கு அனுப்பப்பட்டாள்.

பெல்ஜியத்தில், கெண்ட் சர்வகலாசாலையில், மாணவர்கள் ஆங்கில பாஷையில் பேசிக்கொண்டிருந்தார்களாம் ; பிளெமிஷ் பாஷை (பெல்ஜியர்களுடைய பாஷை) தவிர, சர்வ கலாசாலைக் கட்டடத்துக்குள் வேறு பாஷைகள் பேசலாகாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

செக்கோஸ்லாவாக்கியாவின் தலை நகரான பிரேக்கில், கதவை மூடிக்கொண்டு பொதுக்கூட்டங்கள் நடத்தக்கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. கூட்டம் நடக்கும் கட்டடங்களிலுள்ள எல்லாக் கதவுகளும் திறந்திருக்கவேண்டும் ; இல்லாவிட்டால் கூட்டம் கூட்டியவர்களுக்கு 5,000 'கிரௌன்' (செக் நாணயம்) அபராதம் அல்லது 14 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்படும். இதனால், நாட்டுமக்கள், ஜெர்மனியர்கள் பிரவேசிக்காமல், பொதுக்கூட்டம் நடத்தி, தங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்ல முடியாது. இதல்லாமல், பாட்டுக்கச்சேரிகள் நடக்குமிடம், நாடகசாலைகள், 'சினிமா'க்கள், முதலியவற்றில் எல்லாக் கதவுகளும் திறந்தபடியே இருக்கவேண்டும். மாதாகோவில்களில்கூட எல்லாக்கதவுகளும் திறக்கப்படவேண்டும். இதனால் ரகசியமாகப் பலர் சேர்ந்த இடத்தில் பேச்சு நடக்கக் கூடாது என்பதுதான் ஜெர்மானிய அதிகாரிகளின் நோக்கம்.

"ஆக்ஸ் போர்டு குரூப்" இயக்கம் என்ற கிருஸ்தவமத சம்பந்தமான இயக்கத்தில், ஹாலந்திலுள்ள நாஜிக் கட்சியினர் யாரும் சேரக்கூடாதென்று, கட்சித் தலைவர் மூசர்ட்டு எச்சரிக்கை




*Heliozinco., Survey Office, Madras. 1941.*

*Reg. No. 60/2 Copies 9700*

செய்வதாக, சுதந்தர டச்சுப்பத்திரிகை, "விரீச் நெதர்லாந்து" கூறுகிறது. அந்த இபக்கத்தில் சம்பந்தப்பட்ட நாவிகள் விசாரணை செய்யப்படுவார்களென்றும், இபக்கத்தைப்பற்றிய எல்லா ரகசியங்களையும் அவர்கள் கூறிவிடவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

நார்வேயில், சுதந்தர தேசீய நாளில், ஜெர்மனிக்கு விரோதமான பத்திரிகைகள் ஏராளமாக விநியோகிக்கப்பட்டன. நார்வேயைத் துரோகம் செய்து, ஜெர்மனிக்குக் காட்டிக்கொடுத்த குஸ்லிங்கைத் தாக்கி, அப்பத்திரிகைகளில் கட்டுரை எழுதப்பட்டிருக்கின்றன. நார்வே மக்களுக்கு அரசர் ஹாக்கன் விடுத்த சுதந்தர தேசீய நாள் அறிக்கை முழுவதும் வெளியிடப்பட்டிருக்கிறது.

### 10. நடு நிலைமை நாடுகள்.

ருஷ்யா துருக்கியுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப் போவதாகவும், அதற்காக ஒரு துருக்கி உத்தியோகஸ்தர் சீக்கிரம் மாஸ்கோவுக்குப் போவாரென்றும் தெரிகிறது.

ருஷ்யாவுடன் ஜெர்மனி ஒரு யுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளும் நிலையிலிருக்கிறதென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஹிட்லர், ஸ்டாலினை சந்தித்து ருஷ்யாவுக்கு வேண்டியவைகளைக் கொடுப்பதாக வாக்குறுதி செய்து, ஜெர்மனியின் காரியங்களைச் சாதிப்பதற்கு முயற்சி செய்வதாகத் தெரிகிறது.

மெக்சிகோவில், பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்பெயினின் அயல்நாட்டு மந்திரி, சினர் சூனர் தம்முடைய பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். ஆனால், ஜெனரல் பிராங்கோ ராஜிநாமாவை ஒப்புக்கொள்ளவில்லை.

---

# சூயஸ் சண்டை,

## பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கால்வாயின் முக்கியம்.

### ஜெர்மனியின் நோக்கமும், ஜெனரல் வேவலின் திறமையும்.

மத்தியதரைக் கடலையும், செங்கடலையும், சூயஸ் கால்வாய் ஒன்றாய்ச் சேர்க்கிறது. அதுமாத்திரமல்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளை ஒன்று சேர்க்கும் சங்கிலியில் ஒரு முக்கிய வளையமாகவும் இருக்கிறது. 1869 ம் வருஷ முதல் முதல், மத்தியதரைக் கடலிலிருந்து, செங்கடலுக்கு, சூயஸ் கால்வாய் வழியாகக் கப்பல் போக்குவரத்து ஆரம்பித்தது. இந்த மகத்தான கால்வாயை வெட்டியவர் மகா அறிவாளியான ஒரு பிரெஞ்சு எஞ்சினீயர்; அவருடைய பெயர் பார்டினண்ட் டி லெஸ்ஸெப்ஸ். ஆனால் இதை பிரிட்டனுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவருவதற்குக் காரணமாயிருந்தவர் டிஸ்ரெய்லி என்ற பிரிட்டிஷ் ராஜதந்திர நிபுணர். இவர் விக்டோரியா அரசி ஆண்டகாலத்தில், பிரிட்டிஷ் முதல் மந்திரியாயிருந்தார்.

மத்தியதரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் ஒரு நீர் வழி ஏற்படுத்தவேண்டுமென்று, கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் முயற்சி செய்யப்பட்டது. அப்படிப்பட்ட நீர் வழியின் அவசியம் இந்த இருபதாவது நூற்றாண்டில் மிக நன்றாகப் புலப்படுகிறது; பண்டைக்காலத்திலும், அதன் அவசியத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள். ஆனால் கடைசியில், பலவித கஷ்டங்களுக்குப் பிறகு, லெஸ்ஸெப்ஸ் என்ற பிரெஞ்சுக்காரருடைய முயற்சியால், இந்தக் கால்வாய் வெட்டப்பட்டது. இதற்குத் துருக்கி சுல்தான் 1866-ம் வருஷ அனுமதியளித்தார்; அனுமதிக்குப் பின் மூன்றரை வருஷம் ஆனபிறகுதான், சூயஸ் கால்வாய்வேலை முழுவதும் முடிந்து, மேற்கு உலகத்திற்கும், கிழக்கு உலகத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சூயஸ் கால்வாய் வெட்டி முடிவதற்கு மொத்தச் செலவு 43 கோடி 'பிராங்கு'க்கு (பிரெஞ்சு நாணயம்) மேலாயிற்று. ஒரு கம்பெனி ஏற்படுத்தி, 400,000 பங்குகள் சேர்த்து, இந்தப் பணம் தயார் செய்யப்பட்டது. எகிப்தின் அரசாங்கத் தலைவரான இஸ்மேல் பாஷா என்பவர் ஏராளமான பங்குகள் வாங்கியிருந்தார். ஆனால் அவருக்குப் பணம் வேண்டியிருந்த காரணத்தால், 1 7[illegible]-ம் வருஷ தன்னுடைய பங்குகளை விற்க விரும்பினார். அப்போது பிரிட்டிஷ் முதல் மந்திரி, டிஸ்ரெய்லி, இந்த சந்தர்ப்பத்தைக் கைவிடக்கூடாதென்று நினைத்து, அந்த வருஷம், நவம்பர்மீ 25-ந் தேதி, 176,602 பங்குகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்காக வாங்கினார். வாங்கின விலை 39,76,5[illegible]0 பவுன். இந்தப்பணம் தன்னுடைய நண்பரான ராத்ஸ் சைல்டு பிரபுவிடம் கடனாக வாங்கினார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு, எகிப்தில் ஒரு புரட்சிக கலகம் ஏற்பட்டபோது பிரிட்டன் தலையிட்டு அதை அடக்கிவிட்டது. அப்போது முதல் எகிப்து பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் இருந்துவருகிறது.

### 5,000 மைல் தூரம் குறைக்கப்பட்டது.

சூயஸ் கால்வாயின் மொத்த நீளம் 101 மைல்கள். அதனுடைய அகலம், மிகக் குறைவான இடத்தில், 196 அடி 10 அங்குலம். கப்பல்கள் போவதற்கு நீர் ஆழம் 34 அடி. கால்வாயைக் கடந்து செல்வதற்குச் சராசரி 11½ மணி நேரம் ஆகிறது. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் தூரத்தை இந்தக் கால்வாய் 5,000 மைல்கள் குறைத்துவிட்டது. இதனால் உலக வியாபாரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஏற்படுத்தப்பட்டது. காலம் செல்லச் செல்ல, இந்தக் கால்வாய் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டது. 1938-ம் வருஷ 6,171 கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாகச் சென்றன. அவைகளுடைய மொத்த எடை 34,418,187 டன்கள். பிரிட்டனுடைய 3,000 கப்பல்கள் கால்வாயை உபயோகப்படுத்தின. முன்பு குறித்த மொத்த எடையில் சரிபாதி பிரிட்டிஷ் கப்பல்களுடையது. 1938-ம் வருஷ கால்வாய் வழியாகக்கொண்டு போன சாமானின் மொத்த எடை 28,7[illegible]9,000 டன்கள். கால்வாயை உபயோகப்படுத்திய கப்பல்களிடம் வாங்கிய சூங்கப்பணம் 1870-ம் வருஷத்தில் 5,718,756 பிராங்குகள்; 1938 ம் வருஷத்தில் 1,625,612,100 பிராங்குகள், அதாவது சமார் 3 மடங்கு அதிகப்படியான வரும்படி. வட அமெரிக்காவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் இடையில் பனமா கால்வாய் என்ற ஒரு நீர்வழி ஏற்பட்ட பிறகு கூட, இந்த வரும்படிக்கு அதிகமான பாதகம் ஏற்படவில்லை.

இந்த முக்கியமான சூயஸ் கால்வாயை, பிரிட்டன் பாதுகாத்து வருகிறது. இதற்குப் பலவித இடையூறுகள் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டன. நைல் நதிக் கரையில் பிரெஞ்சுக்காரர்களுடைய சூழ்ச்சி, டார்டனல்ஸ் ஜலசந்தியைத் திறப்பதற்கு ருஷ்யர்கள் செய்த முயற்சி, சென்ற யுத்தத்தின் போது பர்லினிலிருந்து பாக்தாத்துக்கு ரயில் போடவேண்டுமென்று ஜெர்மனி செய்த திட்டம்—இவைகளெல்லாம் சூயஸ் கால்வாயை ஒன்றும் செய்யாதபடி பிரிட்டிஷார் தகுந்த பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள். ஆனால் இரண்டு யுத்தங்களின் அனுபவம் ஒரு முக்கியமான விஷயத்தைக் காட்டி விட்டது. அதாவது, சூயஸ் கால்வாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு மிகச் சௌகரியமானது; ஆனால் மிக அவசியமானதல்ல. ஏனென்றால், சென்ற யுத்தத்தில் 1914—18 வருஷங்களில், மத்தியதரைக்கடலில் 'சப்மரீன்' சண்டை ஏற்பட்ட காலத்திலும், இந்த யுத்தத்தில் ஆகாய விமானத்தாக்குதல் நடந்து வரும் போதும், கிழக்கு நோக்கிச் செல்லும் வியாபாரக் கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாகச் செல்லுவதில்லை; தென்னாப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு செல்கின்றன.

## கான்ஸ்டாண்டிநோபிள் ஒப்பந்தம்.

சென்ற யுத்தம் ஆரம்பித்த பிறகு 1914-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்த போது, எகிப்து நேச நாடுகளுடன் சேர்ந்து, பிரிட்டனின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1922-ம் வருஷம், பிப்ரவரிமீ 28-ந் தேதி இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு ரத்து செய்யப்பட்டபோது, சூயஸ் கால்வாயைப் பாதுகாக்கும்படியான பொறுப்பு தன்னுடையது என்று பிரிட்டன் ஏற்றுக் கொண்டது. சூயஸ் கால்வாய் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட கான்ஸ்டாண்டி நோபிள் ஒப்பந்தத்தின்படி, ஆட்டோமன் ஏகாதிபத்தியம் தான் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பதிலாக, புதிதாகச் சுதந்தரம் பெற்ற எகிப்திடம் அந்தப் பொறுப்பை நிர்வகிக்கும் சுமையைக் கொடுக்க அஞ்சி, பிரிட்டன் தானே அதை ஏற்றுக்கொண்டது. 1936-ம் வருஷத்தில் கையெழுத்திடப்பட்ட ஆங்கிலோ—எகிப்திய உடன்படிக்கையின் 8-வது பிரிவின்படி, சூயஸ் கால்வாய் பிரதேசத்தைப் பிரிட்டிஷ் துருப்புகள் பாதுகாக்க வேண்டியது ; எகிப்தியத்துருப்புகள் தாங்களே பாதுகாக்கும் பலமும் திறமையும் எப்போது பெற்றிருக்கின்றன என்று ஒப்பந்த நாடுகள் கருதுகின்றனவோ அப்போது கால்வாயைக் காக்கும் பொறுப்பு எகிப்திடமே கொடுக்கப்படும். அந்த உடன்படிக்கையின்படி, எகிப்து பிரிட்டனின் நேச நாடாய் விட்டது.

இத்தாலிக்கு, சூயஸ் கால்வாயின் மேல் வெகு நாளாக நோக்க முண்டு. கால்வாயின் வழியாகப் போகும் கப்பல்களிடம், சூயஸ் கால்வாய் கம்பெனியார் விதிக்கும் சுங்க வருமானப் பணத்தின் மேல் இத்தாலிக்கு நிரம்ப ஆசை. இந்தக் கம்பெனியினுடைய உரிமைச் சாசனப் பத்திரம் 1968-ம் வருஷம், நவம்பர்மீ, 17-ந் தேதி காலாவதியாய் விடுகிறது ; அப்போது சூயஸ் கால்வாய் எகிப்திய அரசாங்கத்தின் சொந்த சொத்தாய் விடுகிறது. அதற்குள், அகில தேசிய சிக்கல்கள் பல ஏற்பட்டு வருவதை அறிய வேண்டும்.

நெருங்கிய கிழக்கு அரங்கத்திலும், மத்தியக் கிழக்கு அரங்கத்திலும், ஜெர்மனி நடத்திவரும் சண்டைகளின் நோக்கம், ஒரு பக்கமாக இருந்து சூயஸ்கால்வாயைத் தாக்கவேண்டுமென்பதுதான் ஜிப்ரால்டர், சூயஸ், சிங்கப்பூர் முதலிய மூன்று இடங்களையும் தாக்கி, தனக்கெதிராக செய்துவரும் பொருளாதார முற்றுகையை உடைப்பது என்ற முயற்சியுடன் ஜெர்மனி வேலைசெய்து வருகிறதாகத் தெரிகிறது. இத்தாலி, ஆப்பிரிக்க ஏகாதிபத்தியக் கனவுகளையும், சூயஸ் நீர் வழியைக் கைப்பற்றுவது என்ற பேராசையையும், முழுவதும் விட்டு விட்டதாகத் தெரியவில்லை ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும், இத்தாலியின் பட்டாளமும், கடற்படையும் உருத் தெரியாமல் சீரழிக்கப்பட்டிருந்தபோதிலும், இத்தாலி தன்னுடைய நோக்கத்திற்காக சிறு முயற்சியாவது செய்யும் எண்ணத்தில் இருக்கலாம். எது எப்படியிருந்தாலும், எகிப்திலும், நெருங்கிய கிழக்கரங்கத்திலும், நடக்கும் சண்டைகள், மிக முக்கியமான சூயஸ் பெருஞ் சண்டையாக மாறி விடுமென்றும், அதனுடைய நோக்கங்களும், பலா பலன்களும் இன்னின்னவை என்றும், பிரிட்டன் நன்முக அறிந்திருக்கிறது.

### ஜெர்மனியின் முயற்சி.

ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஒரே சமயத்தில் ஜெர்மனி போர் செய்வதன் காரணம், சூயஸ்கால்வாயைக் கத்தரித்து, அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் இருக்கும் பிரிட்டிஷ் கப்பற்படையை வெளிச்செல்லவொட்டாமல் ஒடுக்கிவிடவேண்டுமென்பதுதான். பிரிட்டனிலிருந்து, இந்தியா, ஆஸ்திரேலியா, தூரக்கிழக்கரங்கம், இவைகளுக்கு வழியாக உள்ள சூயஸ்கால்வாய், திறந்த பாதையாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அதை மூடி விடுவதற்கு ஜெர்மனி முயற்சி செய்கிறது. வியாபார வழியாக மாத்திரமல்லாமல், யுத்தப் போக்குக்கு மிக முக்கிய ஸ்தானமாக சூயஸ் விளங்குகிறது. இதைக் காப்பாற்றுவதற்கும், ஜெர்மனியின் கெட்ட எண்ணங்களைத் தடுப்பதற்கும், என்னென்ன செய்ய வேண்டுமோ, அவைகளை ஜெனரல் வேவல் செய்வாரென்பது நிச்சயம். லிபியாவில் ஜெர்மானியர்கள் முன்னேறியதைத் தடுத்தவர் அவர் தான் ; இராக்கில் ஜெர்மனியின் முயற்சிகளைக் கெடுத்ததும் அவரே. சூயஸிலும் அவர் திறமை நன்மை பயக்கும் என்று முழுவதும் நம்பலாம்.

---

# அபிசீனியாவில் பிரிட்டிஷ் வெற்றி.

## மிஸ்டர் சர்ச்சில் கூறியது மெய்யாயிற்று.

### இரு சகோதரர்கள் கதை ; ஒரே நாளில் ஒருவர் அரசரானுர் மற்றவர் கைதியானுர் !

எகிப்தின் தலை நகராகிய கெய்ரோவில் மேமீ 19-ந் தேதி, பிரிட்டிஷ் ராணுவத் தலைமை ஸ்தானத்திலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளுக்கும், நேச நாடுகளுக்கும், மகிழ்ச்சி யளிக்கும் படியான செய்தியைத் தெரிவித்தது. அம்பா அளகி என்ற மலைக் காட்டையில் இத்தாலியத் துருப்புகள் எல்லாம் பிரிட்டிஷாரிடம் சரணுகதி யடைந்த விஷயத்தை அந்த அறிக்கை அறிவித்தது. இத்தாலியின் அரசப்பிரதிநிதியும், அபிசீனியாவில் உள்ள இத்தாலியத்துருப்புகளின் பிரதம தளகர்த்தருமான அயோஸ்டா பிரபு, அபிசீனியாவின் தலைநகரான அடிஸ் அபாபா பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டபிறகும் கூட, விடாமல் போர் புரிந்தார் கடைசிவரைக்கும் தளராது போர்புரிவேன் என்று சமீபத்தில் இத்தாலியின் சர்வாதிகாரியான முசலோனிக்கு வாக்குறுதி யளித்தார். ஆனுல் எல்லா விஷயங்களிலும் மேம்பாடுடைய பிரிட்டிஷ் துருப்புகளின் முன் அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. கடைசியில் மேமீ 20-ந் தேதி பகல் 12-மணிக்கு அயோஸ்டா பிரபு, ஜெனரல் ரெய்சானி, பிரபுவின் சிப்பந்திகள், இத்தாலியத் துருப்புகள் எல்லோரும் சரணமடைந்தார்கள்.

சூடான் பாதுகாப்புப் படை கோண்டார் பகுதியில் முக்கியமான இடத்தைப் பிடித்துவிட்டது ; எதிரிகளுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது. தெற்குப் பிரதேசத்தில் டால் என்ற இடத்தைப் பிரிட்டிஷ் துருப்புகள் கைப்பற்றின. இரண்டு கர்னல்கள், பல கீழ்தர உத்தியோகஸ்தர்கள், அடங்கிய 800 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். இரண்டு பீரங்கிகளும், இரண்டு யுத்த முஸ்தீப்பு மோட்டார் வண்டிகளும் கைப்பற்றப்பட்டன.

இத்தாலியத் தளகர்த்தர்களெல்லோரையும் விட வீரத்துடன் போர் புரிந்த அயோஸ்டா பிரபு சரணமடைந்த போது, பிரிட்டிஷார்கள் அவருக்கு ராணுவ மரியாதைகள் செய்தார்கள்.

அயோஸ்டா பிரபு சரணமடைந்த அதே நாளில், அவருடைய சகோதரர், ஸ்பொலீடோ பிரபு, குரோஷியா என்ற புதிய நாட்டுக்கு அரசராக்கப்பட்டார் ! குரோஷியா என்பது யூகோஸ்லாவியாவிலிருந்து அச்சு வல்லரசுகள் பிரித்தெடுத்து உண்டாக்கின நாடு.

டால் என்ற இடம் பிடிபட்டதின்பிறகு, இத்தாலியின் 21-வது படையும், 24-வது படையும் புதர்களில் தான் ஓடி ஒளிய வேண்டும். இனிமேல் அபிசீனியாவில் போர் புரியும் வேலை இல்லை. சீக்கிரத்தில் அங்குள்ள துருப்புகளில் பெரும்பாகம், லிபியாவுக்கும், நெருங்கிய கிழக்கரங்கத்துக்கும் அனுப்பப்படும்.

### முளையில் கிள்ளப்பட்டது.

லிபியாவில், ஜெனரல் வேவல் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர், ஜெர்மன் துருப்புகள் எகிப்துக்குச் செல்லும் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட்டார். சோலும் முதலிய எல்லைப்புற இடங்களைப் பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியத் துருப்புகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன. ஜெர்மானியர்கள் இழந்த இடங்களைப் பிடிக்க முயற்சி செய்கிறார்கள். அனால் சோலும் என்ற இடம் பிரிட்டிஷார் கையில் இருப்பது மாத்திரமல்லாமல், தோப்ருக் பிரதேசத்தில் சில இடங்களும் கைப்பற்றப்பட்டன. தோப்ருக்கின் உட் பாதுகாப்பை உடைக்க முயற்சித்த ஜெர்மானியர்கள் பின் தள்ளப்பட்டார்கள். ஜெர்மானியர்களுடைய வெளிப்பாதுகாப்பில் அநேக இடங்களைப் பிரிட்டிஷார் பிடித்துக்கொண்டார்கள்.

இந்தச் சண்டைகளிலெல்லாம் பிரிட்டிஷ் கப்பற் படையும், தென்னாப்பிரிக்காவின் ஆகாய விமானப் படைகளும், சுறுசுறுப்பாய் வேலை செய்தன. லிபியாவின் பெருங்கோட்டையாகிய பென்காசி, பிரிட்டிஷ் படைகளால் கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் அடிக்கடி பலமாகத் தாக்கப்பட்டு வருகிறது. ஜெர்மனியின் 'சப்ளை' கப்பல்களும், துருப்புகளை ஏற்றிச்செல்லும் வண்டிகளும், கப்பல்களும், பிரிட்டிஷாரால் தாக்கப்பட்டு பெருத்த நஷ்டமடைந்தன.

இந்த சமயத்தில் பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில் கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. லிபியாவின் பாலைவனத்தில், ஜெனரல் வேவலுக்கு எதிராக நிற்கும் ஜெர்மன் தளகர்த்தர் ஸ்தானத்தில் நான் இருக்க விரும்பமாட்டேன் என்று அவர் கூறினார். ஜெனரல் வேவல் சென்ற இடமெல்லாம் சிறப்பும், புகழும், வெற்றியும் அடைந்து வருகிறார். அவரை எதிர்த்து நிற்பவர்களுக்குத் தோல்வியே தவிர வேறில்லை.

## விஷி—ஜெர்மன் ஒப்பந்தம்.

### குடியேற்ற நாட்டுப் பிரச்சினையும், அமெரிக்காவின் எச்சரிக்கையும்.

விஷி அரசாங்கத்துக்கும், ஜெர்மனிக்கும் ஒப்பந்தப்பேச்சுகள் நடந்துகொண்டு வருகின்றன. இதை, வருத்தம் நிறைந்ததும், அழுக்கு மிகுந்ததுமான கதை என்று மிஸ்டர் சர்ச்சில் வர்ணித்திருக்கிறார். விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரியாக இருக்கும் மார்ஷல் பீத்தான், நாஜிகளுடைய செல்வாக்கையும், நாட்டுத்துரோகிகள் நயவஞ்சகத்தையும், மீறுவதற்கு முடியாமல், ஜெர்மனிக்கு சரணாகதியடையும்படி நேரிட்டிருக்கிறது. ஜெர்மனிக்கும், விஷிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால், விஷிக்கு உண்டான லாபமென்ன ? ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சுக்கும், விஷி அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சுக்கும் இடையில் உள்ள எல்லை வரையறையைப்பற்றி இருந்த கடுமையான நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன ; பிரான்சில் தங்கியிருக்கும் ஜெர்மன் பட்டாளச் செலவுக்காகக் கொடுக்கப்பட்டுவரும் தொகை வருஷத்துக்கு 40 கோடி 'பிராங்கு' (பிரஞ்சு நாணயம்) களிலிருந்து, 30 கோடி 'பிராங்கு' களாகக் குறைக்கப்பட்டது ; மகாயுத்தத்தில் கைதிகளாக்கப்பட்ட ஒரு லட்சம் பிரெஞ்சுக்காரர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் ; இவர்களை, பிரெஞ்சு தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு உபயோகப்படுத்தலாம். இந்த நன்மைகளெல்லாம், அட்மிரல் தார்லான் நாட்டை இன்னும் அதிகமாகக் காட்டிக் கொடுத்து பெற்றாரென்று சொல்லலாம். விஷியின் ஆதிக்கத்திலுள்ள சிரியாவை நாஜிகளிடம் முழுவதும் ஒப்படைத்தார் என்று இப்போது நன்றாகத் தெரிகிறது. சிரியாவிலிருந்து இராக்குக்கும், இராக்கிலிருந்து சூயஸ் அல்லது கீழ்ப் பிரதேசங்களுக்கும், ஜெர்மனிக்கு விமானத் தங்குமிடங்கள் கிடைக்கும்படி சௌகரியமாய்விட்டது.

சிரியாவின்மேல் பறந்து சென்ற ஜெர்மன் விமானங்கள், சிரியாவைத் தங்குமிடமாக உபயோகப்படுத்தவில்லை என்றும், ஆகையால் சிரியாவின் ஆகாயவிமானத் தளங்களைப் பிரிட்டன் தாக்கியது நியாயமல்லவென்றும், ஜெனரல் டெண்ட்ஸ் என்ற சிரியாவின் பிரெஞ்சு பிரதம தளகர்த்தர் கூறுகிறார். ஆனால், நடந்த விஷயங்கள் இவர் கூறுவதற்குப் பொருத்தமாக இல்லை. சிரியாவில் இருந்த யுத்த சாமான்கள் ரயில் வழியாய் இராக்குக்குக் கொண்டுபோகப்பட்டன ; இதல்லாமல் இன்னும் இதர வசதிகளும் கட்டாயம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். விஷிக்கும், பர்லினுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் ராணுவ சம்பந்தமானது என்று அமெரிக்க மந்திரி, மிஸ்டர் கார்டெல்ஹல் கூறியது கவனிக்கத்தக்கது. வடக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா இவைகளிலுள்ள பிரெஞ்சு குடியேற்ற நாடுகள் ஜெர்மனிக்கு ராணுவத் தளங்களாக உபயோகப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் ; மேற்கு அர்த்தகோளத்தில், அதாவது அமெரிக்காவுக்கருகில், யுத்த சௌகரியங்களை ஜெர்மனிக்குச் செய்து கொடுப்பதற்கு விஷி அரசாங்கத்தார் சம்மதித்திருக்கலாம்.

### பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் யோசனை.

விஷி அரசாங்கம் ஜெர்மனியினுடைய பிடியில் அகப்பட்டுக்கொண்டதென்றும், தன்னுடைய இஷ்டப்படி நடக்கும் சுதந்தரத்தை இழந்துவிட்டதென்றும், கர்னல் நாக்ஸ் கூறியிருக்கிறார். பிரசிடெண்ட் ரூஸ்வெல்டும் விஷியின் செய்கையைக் குறித்துக் கண்டித்திருக்கிறார். மேற்கு அர்த்தகோளத்தில் உள்ள பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் அரசாங்க ஆதிக்கம் மாறுபடுவதாயிருந்தால், லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, பிரெஞ்சு நாடுகளை அமெரிக்கா கைப்பற்றலாமா என்பதைப்பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார். ஜெர்மனியும் பிரான்சும் ஒன்று சேர்ந்தால், 21 அமெரிக்க குடியரசு நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு பொதுவான அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளும். இதற்காக திட்டங்களெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. ஹிட்லருடைய தூதர்களும், விஷியின் பிரதிநிதியான அட்மிரல் தார்லானும் என்ன முடிவு செய்கிறார்கள் ? திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படுவது அந்த முடிவைப் பொறுத்திருக்கிறது. பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் ஜெர்மனியின் ஆதிக்கம் தலையெடுப்பதை அமெரிக்கா கட்டாயம் தடுக்கும் என்று தெரிகிறது.

## ஹெர் ஹெஸ்ஸின் மர்மம்.

### மூளைக் கோளாறு என்ற பொய்க்கதை.

ஹிட்லரின் பிரதிநிதியும், ஆப்த நண்பருமான ஹெர் ஹெஸ், ('ஹெர்' என்பது 'மிஸ்டர்' என்பதற்கு ஜெர்மன் வார்த்தை) பிரிட்டனுக்கு வந்த மர்மம் இன்னும் விளக்கப்படவில்லை. பிரிட்டிஷ் உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரியான மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன், ஹெஸ்ஸை ஒரு கொள்ளை கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று கூறினார். ஹெஸ், ஹாமில்டன் பிரபுவை இரண்டு தடவை பார்த்தார் ; அதிவிரைவாக அவர் பல குறிப்புகள் எழுதிக்கொண்டேயிருக்கிறாரென்றும், அவைகள் பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சிலுக்கு அனுப்பப்படுகின்றனவென்றும் தெரிகிறது. இதற்கிடையில், ஹெஸ் பிரிட்டனுக்கு வந்ததைப்பற்றி, பொது ஜனங்கள் பலவாறாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பல வியாக்கியானங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன :—

(1) ஹெஸ் ஜெர்மனியைவிட்டு ஓடிவந்ததற்குக் காரணம், ஜூன் மாதத்தில் வழக்கம்போல் நடக்கும் பெருங் கொலைகளிலிருந்து தான் தப்பித்துக்கொள்வதற்காக.

(2) ஜெர்மனி ஜெயிக்காதென்று ஹெஸ் உறுதியாக அறிந்துகொண்டார்.

(3) ஜெர்மனியின் ஐக்கிய ஒற்றுமை உடைபட்டது அதன் வெற்றியில் நம்பிக்கை இழக்கப்பட்டது : ஹெஸ் ஓடிவந்தது இதன் முதல் அறிகுறி.

(4) எதேச்சாதிகாரத்தின் அடிப்படையான உறமற்ற தன்மையை, இந்த சம்பவம் காட்டிவிட்டது.

(5) யுத்தம் ஆரம்பித்ததற்குப் பிறகு, ஹிட்லர் திடுக்கிடும்படியான சம்பவங்களில் இது மிகவும் முக்கியமானது.

(6) நாஸிகளுடைய கோட்பாடு பலமற்று உடையும் கட்டடத்தைப் போன்றது என்ற உண்மையை இந்த விஷயம் ருசுப்படுத்திவிட்டது.

(7) ஹிட்லர், அச்சு முகாமில் ருஷ்யாவையும் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்வதை வெறுத்து ஹெஸ் பிரிட்டனுக்கு ஓடிவந்திருக்கலாம்.

ஆனால், முடிவாக உண்மை எது என்பதைத் தீர்மானிப்பதற்கு, மிஸ்டர் சர்ச்சிலினுடைய அறிக்கையை உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஹெஸ் ஒரு யுத்தக் கைதியாகப் பாவிக்கப்பட்டு, கைதிகளுக்குக் கொடுக்கப்படும் சௌகரியங்களைப் பெறுவார் என்று மாத்திரம் மிஸ்டர் சர்ச்சில் கூறினரே ஒழிய, மற்ற முழு விவரங்களை இப்போது கூற மறுத்துவிட்டார். ஹெஸ்ஸுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டதாக ஜெர்மனியில் கூறப்பட்டது முழுப்பொய். உண்மை என்னவென்றால், ஹெஸ் யாதொரு கோளாறுமில்லாத அறிவாளி. அவர் கூறுவதைத் தான் ஹிட்லர் கடைப்பிடித்து நடப்பது வழக்கம். 1939-ம் வருஷத்தில் தனக்கு இரண்டாவது வார்சாக ஹிட்லர் ஹெஸ்ஸை நியமித்ததும், (முதல் வார்சு மார்ஷல் கோயரிங்), ஒரு மாதத்துக்கு முன் ஸ்பெயின் தேசத்துச் சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோவைப் பார்த்துப் பேசுவதற்கு ஹெஸ் அனுப்பப்பட்டதும், ஹெஸ்ஸினுடைய மூளைக் கோளாறு கதை உண்மையல்ல என்பதைக் காட்டுகின்றன. ஹெஸ் ஓடிவந்துவிட்டதால், நாஸிகளுடைய ஆட்சி முறிந்து விழுந்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் பிரிட்டனில் இதை ஒரு மிக முக்கியமான சம்பவம் என்று யாரும் கருதவில்லை ; இதைப்பற்றி மகிழ்ச்சிப் பெருக்கடையவும் இல்லை.

## கொடூரமான கொலை பாதகர்.

ஹெஸ்ஸைப்பற்றி, மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன் கூறியது கவனிக்கத்தக்கது. ஹெஸ் கொடூரமான கொலைபாதகரென்றும், அவருடைய தலைவர் ஹிட்லரைப்போல், அவர் மிக மோசமானதும் கேவலமானதுமான குற்றங்களைச் செய்திருக்கிறாரென்றும், இப்போது முக்கியமான விஷயம் அவர் கூட்டிலடைக்கப்பட்டிருக்கிறாரென்பதுதானென்றும், மிஸ்டர் மாரிசன் கூறினர். சென்ற செவ்வாய்க்கிழமை மேஜர் வியன் ஆடம்ஸ் என்ற பார்லிமெண்டு மெம்பர், மிஸ்டர் சர்ச்சிலை ஒரு கேள்வி கேட்டார். ரத்தக் கறையுள்ள கொலைகாரரான ஹெஸ்ஸைப் பற்றி சில பத்திரிகைகள் வெறுக்கத்தகுந்த புகழ் வார்த்தைகளை உபயோகிப்பதை அரசாங்கத்தார் தடுக்கலாகாதா ?—என்பது தான் அந்தக்கேள்வி. அதற்கு, பலத்த சிரிப்புக் கிடையில், முதன் மந்திரிகூறியதாவது :—' மிஸ்டர் ஆடம்ஸ் அவர்கள் மிகுந்த உணர்ச்சியோடு கூறியதைக் குறைகூற வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை."

இரண்டுபேர் கொலைசெய்யும் கொள்ளைக்காரர்களாக இருக்கலாம். ஆனால் ஒருவர் மற்றவரைக்காட்டிலும் சிறிது வித்தியாசமுடையவராக இருக்கலாம். ஹிட்லர், ஹெஸ்—இவர்களிருவரைப் பற்றிய விஷயம் இதுதான்.

## அமெரிக்காவின் உதவி.

அமெரிக்கா தான் அனுப்பும் யுத்த ஆயுதங்களும், சாமான்களும், பிரிட்டனுக்குச் சேரவேண்டும் என்ற நோக்கங்கொண்டிருக்கிறது. மிஸ்டர் கார்டெல் ஹல் சமீபத்தில் பேசியபோது கூறியதாவது :—"நாங்கள் ஒரு வேலையை ஆரம்பித்தால், அதை முடித்தே தீருவோம். பிரிட்டனுக்கு யுத்த ஆயுதங்களும், உணவுச் சாமான்களும் கொடுப்பதான வேலையை மேற்கொண்டிருக்கிறோம். பிரிட்டன் பாதுகாக்கப்பட்டு வெற்றியுடன் வருவது, அமெரிக்காவுடைய பாதுகாப்பாகும் நான் முன்னும் சொன்னேன், இப்போதும் சொல்லுகிறேன், எங்களுடைய நோக்கம் நிறைவேறாமல் போவதற்கு நாங்கள் விடமாட்டோம். எங்களுடைய தொழிற்சாலைகளில் அதிகமாகச் செய்யப்பட்டுவரும் யுத்த சாமான்கள் பிரிட்டனுக்குப் போய்ச்சேருவதற்கு, கட்டாயம் ஒரு வழி கண்டுபிடித்தே தீருவோம்." அமெரிக்கக் கப்பற்படை பிரிட்டனுக்குச் சாமான் செல்வதற்குச் சகல உதவியும் அளிக்கவேண்டும் என்று கர்னல் நாக்ஸ் கூறியிருக்கிறார்.

பிரிட்டனுக்கு எது நேர்ந்தாலும், அமெரிக்காவையும் பாதிக்கும் என்ற விஷயம் உண்மைதான். ஆனால் அம்மாதிரியான சுயநல எண்ணத்தினல் தான் பிரிட்டனை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று நினைப்பது தவறு. சென்ற பல வருஷங்களாக, மனித சுதந்தரத்துக்காக அமெரிக்கா பாடுபட்டு வந்திருக்கிறது. நாஸிக் கொள்கைகளைக் கண்டிப்பதில், அமெரிக்க அரசியல் தலைவர்கள் கண்டித்தது போல அவ்வளவு வன்மையாக யாரும் கண்டிக்கவில்லை என்று சொல்லலாம். சென்ற வாரத்தில் அந்த அபிப்பிராயம் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறப்பட்டது. பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் சில நாட்களுக்கு முன் பேசியபோது குறிப்பிட்டதாவது :—குடியாட்சிக் கொள்கையை அமெரிக்கா பாதுகாக்கும். நாஸிகளின் அக்கிரமம், அயல்நாட்டு வியாபாரத்தையும், உள்நாட்டு வாணிபத்தையும் அழித்துவிடும். சுதந்தர வாழ்க்கை லட்சியத்தை சிதரடித்துவிடும். ஆகையால்தான், அமெரிக்கா தன்னுடைய கடமையைச் செய்ய முன் வந்திருக்கிறது. உலகப்பொருளாதார அமைப்பு நாஸிகளால் கலைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சீர்திருத்தியமைப்பது அமெரிக்காவின் பொறுப்பு.

யுத்தம் முடிந்தபிறகு, சமாதான மகாநாட்டில் எந்த கொள்கை வற்புறுத்தப்படவேண்டும் என்பதைப்பற்றி, மிஸ்டர் கார்டெல் ஹல் கூறியிருக்கிறார். "உலகத்தில் சட்டத்தை அலட்சியம் செய்யும் மனப்பான்மையை அடியோடு ஒழித்துவிடவேண்டும். இல்லாவிட்டால், அதி சீக்கிரத்தில் முரடர்கள் நம்மைச் சூழ்ந்துகொள்வார்கள். சமாதானம் எந்தக்கொள்கைகளின் மேல் நிலை நிறுத்தப்படவேண்டும் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. அவை யாவன :—

முதலில், தீவிர தேசீயம், வியாபாரத்தடைகளை அதிகமாக ஏற்படுத்தாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது, அகிலதேசீய வியாபாரம் வளர்வதற்காக, ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்மேல் தடைகள் ஏற்படுத்தாமலிருக்கவேண்டும்.

மூன்றாவது, யாதொரு சலுகையுமில்லாமல், எல்லா நாடுகளுக்கும் தொழிலுக்கு உபயோகமாகும் பண்டங்கள் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

நான்காவது, தொழிற்சாலைப் பொருள்களை உபயோகிக்கும் நாடுகளுக்கு, அகில தேசீய ஒப்பந்தங்களினல், தகுந்த பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

ஐந்தாவது, அகில தேசீய பொருளாதார ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி, முக்கியமான முயற்சிகளுக்கு தகுந்த உதவி கொடுப்பதற்கு சௌகரியங்கள் ஏற்படுத்தவேண்டும்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.